**Starting time 11.08 A.M.**

## IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR

## O.S. No. 198/2014

Deposition of **P.W.2** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. Kalpana, Gr. III Bench Clerk of this court, on 08.07.2022 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : அசோகன் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** : நான் குடியிருப்பது காட்டுக்கோட்டை புதூர் கிராமம் என்றால், சரிதான். நான் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க வேண்டி நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால், இல்லை. எனக்கு வாதி ராஜசேகரனை எனக்கு எவ்வளவு காலமாக தெரியும் என்றால், எனக்கு விவரம் தெரிந்த நாள் முதல் தெரியும். எனக்கு தற்போது என்ன வயது என்றால், 61 வயது ஆகும். ராஜசேகரன் இவ்வழக்கை எதுக்காக தாக்கல் செய்துள்ளார் என்றால், ராஜசேகரன் பெயருக்கு அவரது தகப்பனார் 1-ஆம் பிரதிவாதி தர்மலிங்கம் தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதியதை ரத்து செய்து விட்டார், அது செல்லாது என்று இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். ராஜசேகரன் எங்கு குடியிருக்கிறார் என்றால், காட்டுக்கோட்டை புதூர் கிராமத்தில் உள்ள அவரது நிலத்தில் குடியிருக்கிறார். நான் எனது வீட்டிற்கும் ராஜசேகரன் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால், 3/4 கிலோ மீட்டர் இருக்கும். தர்மலிங்கம் எங்கு குடியிருக்கிறார் என்றால், ஊருக்கு வடக்கே உள்ள அவரது தனிப்பட்ட வீட்டில் குடியிருக்கிறார். தர்மலிங்கம் மனைவி உயிருடன் உள்ளாரா என்றால், அவர் 12 வருடங்களுக்கு முன்பு காலமாகிவிட்டார். தர்மலிங்கம் மனைவி காலமான பின்னர் அவரே சமைத்து சாப்பிட்டு கொண்டு

வருகிறார் என்றால், சரிதான். 2-ஆம் பிரதிவாதி எங்கு வசிக்கிறார் என்றால், அவர் காட்டுகோட்டையில் இல்லை, ஆத்தூரில் வசிக்கிறார் என்று கேள்விபட்டேன், ஆனால் நேரடியாக தெரியாது. எனக்கும், கிருஷ்ணமூர்த்திக்கும் நேரடியாக பழக்கம் உண்டு. நான் எதற்காக சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால், 30.08.2010 அன்று வாதியின் பெயருக்கு தர்மலிங்கம் தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்தபோது நான் உடனிருந்தேன். அது சம்மந்தமாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அந்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து செய்துள்ளேன் என்றால், இல்லை. அந்த ஆவணத்தில் நான் இன்னாரென்று நிரூபித்தவர்கள் என்ற இடத்திலும் நான் சாட்சி கையெழுத்து செய்யவில்லை என்றால், சரிதான். அந்த ஆவணத்தில் யார் யார் சாட்சி கையெழுத்து செய்தது என்றால், ரத்தினம் மகன் மணி என்பவரும், முகமது அலி என்பவரும் கையெழுத்து செய்தார்கள். அவர்கள் எந்த ஊரை சேர்ந்தவர்கள் என்றால், அவர்கள் இருவரும் காட்டுக்கோட்டையை சேர்ந்தவர்கள். தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதியபோது நான் உடனிருந்ததாக சொல்வது தவறு என்றும், அதுபோல் நான் செல்லவில்லை என்றால், சரியல்ல. சாட்சி மணி என்பவரது தகப்பனார் பெயர் என்னவென்றால் ரத்தினம் ஆகும். ரத்தினம் மகன் மணி எனபவர் சாட்சி கையெழுத்து செய்யவில்லை என்றும், மாரிமுத்து நாடார் என்பவரது மகன்தான் சாட்சி கையெழுத்து செய்தார் என்றால் சரியல்ல. அதே போல் முகமது அலி என்பவரும் சாட்சி கையெழுத்து செய்ததாக சொல்வதும் தவறு என்றும், முகமது அலி என்பவரும் சாட்சி கையெத்து செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன 2 நபர்கள் சாட்சி கையெழுத்து செய்யவில்லை என்றும், இன்னாரென்று நிரூபித்தவர்கள் என்ற இடத்தில்தான் கையெழுத்து செய்தார்கள் என்றும், அவர்கள் ஆவணம் பதிவு செய்தபோது சார்பதிவாளர் அலுவலகத்தில் கையெழுத்து செய்தார்கள். தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதியது குறித்து எனக்கு எதுவும் நேரடியாக தெரியாது என்றும், வாதியை எனக்கு சிறு வயதிலிருந்தே தெரியும் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. மேற்படி சாட்சிகள் கையெழுத்து செய்தபோது வாதி ராஜசேகரன் அங்கு இருந்தாரா என்றால், இல்லை. மேற்படி தான

செட்டில்மெண்ட் பத்திரத்தையே வாதி ராஜசேகர்தான் தயாரித்தார் என்றும், அவர்தான் என்னை சார்பதிவாளர் அலுவலகத்துக்கு அழைத்துச்சென்றார் என்றும், தர்மலிங்கம் என்னை சார்பதிவாளர் அலுவலகத்துக்கு அழைத்துச்சென்றதாக சொல்வது பொய் என்றால், சரியல்ல. நான் சார்பதிவாளர் அலுவலகத்துக்கு சென்றதாக வாதியே சாட்சியம் அளிக்கவில்லை என்றும், அதற்கு முரணாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் தான செட்டில்மெண் பத்திரத்தில் சாட்சி கையெழுத்தே செய்யாத நிலையில், ஆவண பதிவின்போது சார்பதிவாளர் அலுவலகத்தின் உள்ளேயே செல்லவில்லை என்றால், சரியல்ல, ஆவணம் பதிவு செய்த போது உள்ளே இருந்தேன். தான செட்டல்மெணட் பத்திரம் குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றும், வாதி கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

1-ஆம் பிரதிவாதி தரப்பில், 2, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

4-ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

வாதி தரப்பில் மறு விசாரணை இல்லை.

Ending Time: 11.33 A.M.

**ஒப்பம்/- ஜி.யுவராஜ்**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ.),**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**